DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

Depositions of Witness for Prosecution Pw 9
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மாரிச்செல்வி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of February 2026.

**(A1, A2 Present. )**

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகரில் வசித்துவருகிறேன். வீட்டு வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம், எனது அக்கா மகன் ஆவார். அ.சா.1 முப்புடாதியும் எனது அக்கா மகனாவார். 23.04.2022 அன்று எனது அக்கா மகன் மாரிச்செல்வத்தை சரவணன் என்பவரும், முத்துக்குமார் என்பவரும் வெட்டிவிட்டார்கள் என்று எனக்கு தொலைபேசியில் தகவல் வந்தது. அதன் பேரில் நான் தென்காசி அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். நான் அங்கு செல்வதற்குள் மாரிச்செல்வத்தின் உடலை அரசு மருத்துவமனை பிணவறைக்கு எடுத்துசென்றுவிட்டார்கள். மாரிச்செல்வத்திற்கும் எதிரிகளுக்கும் இடையே லாரியை சேதப்படுத்தியது சம்பந்தமாக முன்விரோதம் இருந்துவந்ததாக சொன்னார்கள். அதன் காரணமாக மாரிச்செல்வத்தை அவர்கள் வெட்டிவிட்டார்கள் என நான் கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் விருதுநகரில் நிரந்தரமாக வசித்துவருகிறேன் என்றால் சரிதான். ஏதேனும் விசேஷம் என்றால் ஊருக்கு வருவேன், அல்லது 2 மாதங்களுக்கு ஒருமுறை வருவேன். அன்றையதினம் நான் தற்செயலாகத்தான் ஊருக்கு வந்திருந்தேன். நான் ஊரில் எங்கள் வீட்டில் இருக்கும்போது மாரிச்செல்வத்தை வெட்டிவிட்டார்கள் என்று தகவல் கிடைத்தது என்றால் சரிதான். அப்போது வீட்டில் நானும் எனது அக்காவும் இருந்தோம். எனது சின்ன அக்கா பொன்னுத்தாயின் மகன் முப்புடாதி தொலைபேசியில் தகவல் சொன்னார். அவர் எங்களிடம் தகவல் சொல்லும்போது, 1, 2 எதிரிகள் சேர்ந்து மாரிச்செல்வத்தை வெட்டியதாகத்தான் சொன்னார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் எது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அந்த பகுதிக்கு சென்றபோது, மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலீசார் அங்கு இல்லை. நான் மட்டும் அந்த இடத்திற்கு ஆட்டோவில் சென்றேன். தகவல் கிடைத்த அரை மணி நேரத்தில் நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் செல்வதற்கு முன்னரே மாரிச்செல்வத்தின் உடலை போலீசார் பிணவறைக்கு எடுத்துசென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்ற சமயம் சுமார் 5 – 6 உறவினர்கள் அங்கு வந்துவிட்டார்கள். வழக்கு சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்னர்தான் நான் எங்கள் ஊருக்கு வந்தேன். வழக்கு சம்பவத்திற்கு முந்தைய நாள் எங்கள் ஊர் காமராஜர் சிலை அருகே இரண்டு தரப்பினருக்கு இடையே கலவரம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்திற்கு மறுநாள் வேதம்புதூரில் உள்ள

எனது மற்றொரு அக்காவின் வீட்டில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

நான் சம்பவதினத்தன்று விருதுநகரில் இருந்தேன் என்றும், சம்பவம் குறித்து கேள்விப்பட்டு மறுநாள்தான் ஊருக்கு வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தன்று ஊரில் இருந்ததாகவும், தொலைபேசியில் 1, 2 எதிரிகள் மாரிச்செல்வத்தை வெட்டிவிட்டார்கள் என்று தகவல் கிடைத்ததாகவும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் எனது அக்கா மகன் என்பதால் நான் போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வதும், மாரிச்செல்வத்தின் உடலை போலீசார் பிணவறைக்கு எடுத்துசென்றுவிட்டார்கள் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

**( மேற்படி குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்கப்படுகிறது)**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | |
|---|---|
| Depositions of Witness for | Prosecution Pw 10 |
| | Defence |
| | Court |
| Name : | திரு. முருகேசன் |
| Father's Name : | |
| Village : | |
| Taluk : | |
| Caste : | |
| Calling : | |
| Religion : | |
| Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of February 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது குத்துக்கல்வலசையில் வசித்துவருகிறேன். மாங்காய் வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம், எனது உறவினர் ஆவார். அ.சா.1 முப்புடாதியும் எனது உறவினர்தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நானும், முப்புடாதி என்பவரும் அய்யாபுரம், காமராஜர் சிலை அருகே உள்ள டீக்கடையில் டீ குடித்துவிட்டு செல்லும்போது அருகே முத்துக்குமார் நின்றுகொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியே மாரிச்செல்வம் தனது பைக்கில் அந்த பக்கம் சென்றார். அப்போது முத்துக்குமாருக்கும், மாரிச்செல்வத்திற்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. மாரிச்செல்வம் தனது இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். உடனே, முத்துக்குமார் தன்னுடைய செல்போனில் தொடர்புகொண்டு, சரவணன் மாமா மாரிச்செல்வம் பைக்கில் வந்துகொண்டிருக்கிறான் அவன் கதையை இன்று முடித்துவிடவேண்டும் என்று சொன்னார். இதை சொல்லிவிட்டு முத்துக்குமார் தன்னுடைய பைக்கை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். மாரிச்செல்வம் சென்ற வழியிலேயே அவரை பின்தொடர்ந்துசென்றார்.

அதன் பின்னர் மதியம் 03.00 மணியளவில் நான் என்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் மாரிச்செல்வத்தை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

குத்துக்கல்வலசையிலிருந்து அய்யாபுரம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 2 – 3 கி.மீ இருக்கும். அய்யாபுரத்திற்கு வடக்கே குத்துக்கல்வலசை உள்ளது. அய்யாபுரத்திற்கு தெற்கே மெயின்ரோடு உள்ளது. நான் இதற்கு முன்னர் முத்துக்குமாருடன் பார்த்து, பேசி பழக்கம் கிடையாது என்றால் சரிதான். அவருடைய வீடு எங்கே உள்ளது, அவர் என்ன தொழில் செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாரிச்செல்வம் என்ற நபருடனும் எனக்கு இதற்கு முன்னர் பார்த்து, பேசி பழக்கம் கிடையாது என்றால் சரிதான். அவர் எதற்காக அவ்வாறு பேசினார் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கனகராஜ் டீக்கடை என்பது அய்யாபுரம் ஊருக்கு வரும் மெயின்ரோட்டில் முகப்பில் உள்ளது என்றால் சரிதான். காமராஜர் சிலைக்கும் கனகராஜ் டீக்கடைக்கும் இடையே எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. ஆனால் நாங்கள் கனகராஜ் டீக்கடையில் டீ குடித்துவிட்டு, காமராஜர் சிலை வரை நடந்துவந்துவிட்டோம். காமராஜர் சிலை ரோட்டின் கிழக்குப்பக்கம் அமைந்துள்ளது. காமராஜர் சிலையின் வடக்கே நாங்கள்

நின்றுகொண்டிருந்தோம். காமராஜர் சிலையிலிருந்து எவ்வளவு தொலைவில் நாங்கள் நின்றுகொண்டிருந்தோம் என்றால் அதை தற்போது என்னால் சொல்ல இயலவில்லை. காமராஜர் சிலை அருகே பஜார் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது ஒரு பேருந்து நிறுத்தம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் அருகே ஒரு ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் அருகே ஒரு பள்ளிக்கூடம், கோவில் ஆகியவை உள்ளன என்றால் சரிதான்.

நான் அன்றையதினம் முப்புடாதியுடன் தோப்பில் மாங்காய் உள்ளதை பார்ப்பதற்கு வியாபாரரீதியில் சென்றேன். அய்யாபுரத்திற்கு மேற்கே உள்ள அழகப்பபுரத்தில் உள்ள தோப்பை பார்ப்பதற்காக சென்றோம். அது அய்யாபுரம் மெயின்ரோட்டிற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டின் வழியே சென்றால் கணக்கப்பிள்ளைவலசை சென்று குத்துக்கல்வலசை அடைந்துவிடலாம் என்றால் சரிதான். முத்துக்குமார் சென்றபிறகு நாங்கள் நேரே தோப்பிற்கு நடந்து சென்றோம். அழகப்பபுரம் செல்லவேண்டும்என்றால் கனகராஜ் டீக்கடை வழியாகவும் செல்லமுடியும், வேறு குறுக்கு பாதையும் உண்டு. முத்துக்குமார் அலைபேசியில் தொடர்புகொண்ட சரவணன் மாமா என்பவரை பற்றிய எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்துக்குமார் அன்றைய தினம் என்ன நிற உடையணிந்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்ன உடை அணிந்திருந்தார் என்ற விவரமும் தற்போது எனக்கு நினைவில்லை. மாரிச்செல்வமும் முத்துக்குமாரும் ரோட்டில் வாய்த்தகராறில் ஈடுபட்டபோது அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்களா என்றால் அதை நான் கவனிக்கவில்லை.

நான் சொன்னதுபோல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், அங்கு முத்துக்குமாரும், மாரிச்செல்வமும் சண்டைபோட்டுக்கொண்டார்கள் என்று சொல்வதும், அங்கு முத்துக்குமார் செல்போனில் பேசியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் நான் மாங்காய் வியாபாரம் செய்யவில்லை

என்றும், நான் இறந்துபோன மாரிச்செல்வத்தின் கோழிப்பண்ணையில் கோழிவெட்டும் வேலை செய்துவந்தேன் என்றும், இறந்துபோன நபருக்கு நான் வேண்டிய நபர் என்பதால் போலீசார் என்னை சாட்சியாக முன்னிறுத்தியுள்ளார்கள் என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அய்யாபுரம் ஊருக்கு சென்றது கிடையாது என்றும், அதனால்தான் அந்த ஊரைப்பற்றிய விவரங்களை என்னால் தற்போது சொல்ல இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன மாரிச்செல்வத்தின் சகோதரர், முப்புடாதியின் தூண்டுதலின்பேரில் நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் முத்துக்குமார் எந்தவொரு நபரிடமும் செல்போனில் பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் கனகராஜ் டீக்கடையில் டீ குடித்துக்கொண்டிருந்த முப்புடாதி என்ற நபர் இன்று நீதிமன்றம் வந்துள்ளார் என்றால் சரிதான்.

**( மேற்படி குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்கப்படுகிறது)**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 11 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. முப்புடாதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of February 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்துவருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம், எனது உறவினர் ஆவார். அ.சா.1 முப்புடாதியும் எனது உறவினர்தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், நானும், முருகேசன் என்பவரும் கனகராஜ்டீக்கடையில் டீ குடித்துவிட்டு காமராஜர் சிலை பக்கம் சென்றபோது, அங்கு முத்துக்குமார் நின்றுகொண்டிருந்தார். அந்த வழியே வந்த

மாரிச்செல்வம் முத்துக்குமாரை பார்த்ததும் இருவருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. முத்துக்குமாரை திட்டிவிட்டு மாரிச்செல்வம் தனது இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். உடனே, முத்துக்குமார் தன்னுடைய செல்போனை எடுத்து சரவணன் மாமா, மாரிச்செல்வம் என்னை மானக்கேடாக பேசிவிட்டான், அவனை இன்று வெட்டி கொலைசெய்துவிடவேண்டும் என்று சொல்லிவிட்டு தன்னுடைய இருசக்கர வாகனத்தில் மாரிச்செல்வம் சென்ற வழியில் சென்றுவிட்டார். அதன் பின்னர் நானும், முருகேசனும் அழகப்பபுரத்தில் உள்ள தோப்பிற்கு சென்றுவிட்டோம். அதன் பின்னர் அன்றைய தினம் மாலை 04.30 மணியளவில் மாரிச்செல்வத்தை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று என் மனைவி சொல்லி கேள்விப்பட்டேன். அதன் பிறகு நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்தேன். அங்கு பிணவறையின் முன்பு குளத்தூரான் மகன் முப்புடாதியும், சுப்பிரமணியன் மகன் முப்புடாதியும் இருந்தார்கள். அவர்களிடம் அன்று காலை நடந்த சம்பவம் குறித்து சொன்னேன். சரவணனும் முத்துக்குமாரும் மாரிச்செல்வத்தை கொலை செய்துவிட்டதாக நான் தெரிந்துகொண்டேன். இதுசம்பந்தமாக மறுநாள் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

காமராஜர் சிலையிலிருந்து சம்பவம் நடந்த இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். இருசக்கர வாகனத்தில் சென்றால் 3 நிமிடத்தில் அந்த இடத்தை அடைந்துவிடலாம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது வீடு, ஊருக்கு தென் பகுதியில் பிள்ளையார் கோவில் அருகே உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன நபரின் வீடு எங்கள் வீட்டின் அருகே உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் மாந்தோப்பிற்கு செல்வதை தவிர எனக்கு வேறு வேலை இல்லை என்று சொன்னால் சரிதான். அழகப்பபுரத்தில் உள்ள தோப்பு எனக்கு சொந்தமானது, அது 8 ஏக்கர் பரப்பளவு கொண்டது, அது குத்துக்கல்வலசை கிராமத்தை சேர்ந்தது. அய்யாபுரம் விலக்கிலிருந்து 2 கி.மீ மேற்கே அழகப்பபுரம் தோப்பு உள்ளது. கனகராஜ்

டீக்கடையிலிருந்து நேராக மேற்கே சென்றால் மேற்படி தோட்டத்திற்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். என்னுடன் அன்றையதினம் நின்றுகொண்டிருந்த முருகேசன் தோப்பிலுள்ள மாங்காய்களை பார்த்து வாங்கி விற்பனை செய்யும் புரோக்கர் ஆவார். எனக்கு தோட்டத்திலிருந்து மாங்காய் வியாபாரம் மூலமாக வருடம் ரூ.5 லட்சம் வருமானம் கிடைக்கும்.

நானும், முருகேசனும் சம்பவ தினத்தன்று கனகராஜ் டீக்கடையில் இருந்தோமா என்பதை அந்த கடைக்காரரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வீணாக பொழுதை கழிப்பதற்கு காமராஜர் சிலை அருகே பொதுமக்கள் அமர்ந்திருப்பார்கள் என்றால் அதன் அருகே தென்பக்கம் உள்ள கோவிலில் அமர்ந்திருப்பார்கள். மாரிச்செல்வமும், முத்துக்குமாரும் சண்டைபோட்ட நேரத்தில் காமராஜர் சிலை பகுதியில் வேறு பொதுமக்கள் யாரும் இல்லை, ஆனால் ஆட்கள் இருசக்கர வாகனங்களில் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அந்த நபர்கள் மேற்படி சண்டையை கவனிக்கவில்லை. நான் சண்டையை தடுக்க முயற்சிசெய்வதற்கு முன்னர் மாரிச்செல்வம் இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து சென்றுவிட்டார். மாரிச்செல்வத்திற்கு நான் சித்தப்பா முறை வேண்டும் என்றால் சரிதான். நடந்த சண்டை தொடர்பாக உடனே மாரிச்செல்வத்தின் அப்பாவிற்கோ, அவரது உடன் பிறந்தவர்களுக்கோ நான் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான், சாதாரண சண்டை என நினைத்துக்கொண்டேன். நானும், முருகேசனும் அழகப்பபுரம் மாந்தோப்பில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் 3 மணி நேரம் இருந்தோம்.

என்னிடம் இருசக்கர வாகனம் உள்ளது என்றால் சரிதான். நான் அங்கிருந்து வரும்போது கனகராஜ் டீ கடைக்கடை வழியாக வந்தேனா என்றால் நான் தோட்டத்திலிருந்து நேராக தென்காசி சென்றுவிட்டேன். என்னிடம் சொல்போன் உண்டு என்றால் சரிதான். இறந்தவரின் செல்போன் எண் எனக்கு தெரியாது. அவரது அப்பாவின் செல்போன் எண் எனக்கு தெரியும். காமராஜர் சிலையிலிருந்து மாரிச்செல்வம் வீட்டிற்கு செல்வதற்கு நடந்து சென்றால் 20

நிமிடம் ஆகும். நான் தென்காசி அரசு மருத்துவமனையில் சுமார் 20 நிமிடங்கள் இருந்தேன். அங்கிருந்த நபர்களிடம் எனக்கு தெரிந்த விவரங்களை சொல்லிவிட்டு உடனே ஊருக்கு வந்துவிட்டேன். நான் மருத்துவமனைக்கு செல்லும்போது, மாரிச்செல்வத்தின் உடலை பிணவறைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். அங்கு போலீசார் அப்போது இல்லை. இறந்து போன மாரிச்செல்வத்தின் சகோதரர் முப்புடாதி, காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தாரா என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. அன்றைய தினம் இரவு போலீசார் என்னை அழைத்து விசாரிக்கவில்லை.

முத்துக்குமார் அன்றைய தினம் என்ன உடை அணிந்திருந்தார் அது என்ன நிறம் என்ற விவரம் எனக்கு தற்போது நியாபகமில்லை. நான் சொன்னதுபோல் நானும் முருகேசனும் கனகராஜ் டீக்கடையில் டீ குடித்துவிட்டு காமராஜர் சிலை அருகே சென்றோம் என்றும், அப்போது முத்துக்குமார் நின்றுகொண்டிருந்தார் என்று சொல்வதும், அவருக்கும் மாரிச்செல்வத்திற்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக சொல்வதும், அதன் பிறகு முத்துக்குமார் செல்போனில் சரவணனுக்கு போனில் பேசியதாக சொல்வதும், மாரிச்செல்வத்தை கொலை செய்யவேண்டும் என முத்துக்குமார் சொன்னதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முத்துக்குமாரை ஒரு எதிரியாக சேர்க்கவேண்டும் என்பதற்காக 2 நாட்களுக்கு பின்னர் போலீசார் யோசனை செய்து என்னையும் முருகேசனையும் சாட்சிகளாக முன்னிறுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மாரிச்செல்வத்தை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்ற விவரத்தை என் மனைவி சொன்னதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், முப்புடாதியிடம் நடந்த சம்பவம் குறித்து நான் தகவல் சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எனக்கு மாந்தோப்பு கிடையாது என்றாலும், முருகேசன் மாங்காய் வியாபாரி கிடையாது என்றாலும் சரியல்ல. சாட்சி முருகேசன், மாரிச்செல்வத்தின் கோழிப்பண்ணையில் கோழி வெட்டும் நபர்

என்று சொன்னால் சரியல்ல. நான் இறந்துபோன நபரின் உறவினர் என்பதால் ஏற்கெனவே எதிரிகளுடன் எங்களுக்கு இருந்த முன்விரோதத்தின் காரணமாகவும் முப்புடாதியின் தூண்டுதலின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 முப்புடாதி இன்று நீதிமன்றம் வந்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் அவர் அழைத்து நான் நீதிமன்றம் வரவில்லை.

**( மேற்படி குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்கப்படுகிறது)**

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi